DEPOSITION OF WITNESS

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.126/2015

PROSECUTION WITNESS L.W.3/P.W.2

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஐயப்பன் | தகப்பனார் பெயர் | ராஜகோபால் |
| கிராமம் | ஆனைக்கல்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | சிப்காட் | வயது | |

**1,2 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 16.09.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, ஆனைக்கல் பாளையத்தில் குடியிருந்து வருகிறேன். சிப்காட்டில் EXport ல் வேலை செய்து வருகிறேன்.

2) அ.சா.1 வெண்ணிலா எனது அக்கா ஆவார். பட்டியல் சாட்சி -2 கண்ணம்மாள் எனது அம்மா ஆவார். 06.01.2014 ம் தேதி நான், எனது அம்மா, மற்றும் எனது அக்கா மற்றும் எனது அண்ணனுடன் நாங்கள் புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த வீட்டில் இரவு தூங்கிவிட்டு, மறுநாள் காலை 6.00 மணிக்கு, பக்கத்தில் இருக்கும் எங்கள் ஓலை வீட்டிற்கு சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டிருந்தது. துணிகள் களைந்து கிடந்தது. எங்கள் வீட்டில் இருந்த 5 செட் தோடு, செயின் என மொத்தம் 2 1/2 பவுன் நகை மற்றும் பணம் ரூ.10000/- திருடு போயிருந்தது என்று தாலுக்கா காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக எனது அக்கா புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தனர்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து தாலுக்கா காவல்நிலையம் செல்ல 10 நிமிடங்கள் ஆகும். எனது அக்கா விவகாரத்து வழக்கு சம்மந்தமாக நீதிமன்றத்திற்கு வந்து போய் பழக்கம் உள்ளது என்பதால் அவர் புகார் அளித்துள்ளார் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை யார் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இட வீடானது

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.09.16 12:29:30 +0530

கண்ணம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். கண்ணம்மா நேரில் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். நானும் எனது அண்ணனும் புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம். சம்பவம் நடைபெற்றதாக சொல்வது 05.01.2014 இரவு என்றாலும், இது பற்றி 06.01.2014 காலை பார்த்ததாக புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து 09.01.2014 ல் தான் புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடைபெறவில்லை என்பதால் தான் தங்க நகைகள் திருடுபோனதாக ஜோடித்து 4 நாட்கள் கழித்து புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

3) இவ்வழக்கின் சாட்சிகள் பாலமணிகண்டன், பிரபு, தங்கராஜ் ஆகியோர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்றால் எனது நண்பர்கள். விக்னேஷ்குமார் எனது நண்பர் என்றால் ஆமாம். நான் சொன்ன தேதி, நேரம், இடம் ஆகியவை வழக்கிற்காக போலீசாரால் ஜோடிக்கப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.09.16 12:29:37 +0530

Judicial Magistrate No.I,

Erode.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I COURT, ERODE

C.C.No.126/2015

PROSECUTION WITNESS L.W.1/P.W.1

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெண்ணிலா | தகப்பனார் பெயர் | ராஜகோபால் |
| கிராமம் | ஆனைக்கல்பாளையம் | ஊர் | ஈரோடு |
| தொழில் | | வயது | |

**1,2 எதிரிகள் ஆஜர்.**

Solemnly affirmed in accordance with the provisions of ACT X of 1873 of the day of 16.09.2025

**முதல் விசாரணை**

1) நான் தற்போது ஈரோடு, ஆனைக்கல்பாளையத்தில் குடியிருந்து வருகிறேன்.

2) கடந்த 06.01.2014 ம் தேதி, நான், எனது அம்மா, மற்றும் எனது தம்பிகளுடன் நாங்கள் புதிதாகக் கட்டிக் கொண்டிருந்த வீட்டில் இரவு தூங்கிவிட்டு, மறுநாள் காலை 6.00 மணிக்கு, பக்கத்தில் இருக்கும் எங்கள் ஓலை வீட்டிற்கு சென்று பார்த்தபோது, பீரோ உடைக்கப்பட்டிருந்தது. துணிகள் களைந்து கிடந்தது. எனது மகளின் 5 செட் தங்கதோடுகள், தங்க செயின் மொத்தம் 2 1/2 பவுன் மற்றும் பணம் ரூ.10000/- திருடு போயிருந்தது என்று தாலுக்கா காவல்நிலையம் சென்று சம்பவம் தொடர்பாக புகார் அளித்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். (**புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). நான் பதற்றத்தில் தங்க நகைகள் காணமால் போய்விட்டதாக புகார் அளித்துவிட்டேன். நன்றாக தேடி பார்த்தபோது கவரிங் நகைகள் மட்டும் காணாமல் போனது தெரியவந்து, போலீசாரிடம் இது பற்றி கூறினேன். பணம் ரூ.10000/- மற்றும் கவரிங் நகைகள் மட்டுமே திருடுபோயிருந்தது. 2, 3 நாட்கள் கழித்து திருடிய

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.09.16 12:29:51 +0530

நபர்களை போலீசார் பிடித்துவிட்டதாகவும், ரூ.7000/- பணம் மட்டும் மீட்கப்பட்டுள்ளதாகவும் தகவல் தெரிவித்தார்கள். பணத்தை நான் மனு தாக்கல் செய்து திரும்ப பெற்றுக் கொள்ளவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர். என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள 7000/- ரூபாய் பணம் தான் என்னிடம் இருந்து திருடி எடுத்துச் செல்லப்பட்ட பணம் ஆகும். (**ரூ.7000/- ரூபாய் நோட்டுகள் அடங்கிய புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

**2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் குடியிருக்கும் வீட்டிலிருந்து தாலுக்கா காவல்நிலையம் செல்ல 10 நிமிடங்கள் ஆகும். நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் நீதிமன்றத்திற்கு வந்து போய் பழக்கம் உள்ளது என்றால் சரிதான். என்னுடைய விவகாரத்து வழக்கு ஈரோடு நீதிமன்றத்தில் தான் நடந்தது என்றால் சரிதான். ஆஜர் எதிரிகளை யார் என்று எனக்கு தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இட வீடானது கண்ணம்மாள் என்பவருக்கு சொந்தமானது என்றால் சரிதான். கண்ணம்மா நேரில் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம். கண்ணம்மாளின் இரண்டு மகன்களும் புகார் அளிக்கவில்லை என்றால் ஆமாம். சம்பவம் நடைபெற்றதாக சொல்வது 05.01.2014 இரவு என்றால் சரிதான்.

2) நான் 06.01.2014 காலை பார்த்ததாக புகார் அளித்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்து 4 நாட்கள் கழித்து 09.01.2014 ல் தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் உண்மையில் நடைபெறவில்லை என்பதால் தான் தங்க நகைகள் திருடுபோனதாக ஜோடித்து 4 நாட்கள் கழித்து புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் சம்மந்தமாக நான்கு முறை காவல்நிலையத்தில் வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். கடந்த 28.01.2014 அன்று நான் அளித்த மறு வாக்குமூலத்தில் பணம் மட்டும் திருடு போனதாக சொன்னால் போலீசார் பெரிதாக எடுத்துக் கொள்ளமாட்டார்கள் என்றும் நகைகளும் சேர்த்து காணாமல் போனதாக புகார் கொடுத்தால் தான் நடவடிக்கை எடுப்பார்கள் என்று அருகில் இருப்பவர்கள் கூறியதால் மிகைபடுத்தி புகார் கொடுத்தாக வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம்.

3) நான் தவறாக புகார் கொடுத்ததற்கு வருத்தம் தெரிவித்து வாக்குமூலம் அளித்துள்ளேன் என்றால் ஆமாம். இவ்வழக்கின் சாட்சிகள் பாலமணிகண்டன், பிரபு, தங்கராஜ் ஆகியோர்கள் எனக்கு

VANJI NATHAN R Digitally signed by VANJI NATHAN R Date: 2025.09.16 12:29:57 +0530

வேண்டியவர்கள் என்றால் ஆமாம். விக்னேஷ்குமார் எனது தம்பியின் நண்பர் என்றால் ஆமாம். நானும், மேற்படி நபர்களும் காவல்நிலையம் சென்று கையொப்பம் செய்தோம் என்றால் ஆமாம். நான் சொன்ன தேதி, நேரம், இடம் ஆகியவை வழக்கிற்காக போலீசாரால் ஜோடிக்கப்பட்டது என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

VANJI NATHAN R

Digitally signed by VANJI NATHAN R
Date: 2025.09.16 12:30:03 +0530

**2ம் எதிரி தரப்பு குறுக்குவிசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.**

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

Judicial Magistrate No.I,
Erode.

அரசு தரப்பில் சாட்சி குவிமுச பிரிவு 161ன் கீழ் அளித்துள்ள வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியமளிப்பதால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்கக்கோரியும், குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு, அனுமதியளிக்கப்பட்டதன்பேரில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணை:

**(எதிரி ஆஜர் இல்லை. எதிரி சார்பில் கு.வி.மு.ச. பிரிவு - 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது).**

**C.M.P. No. 15649/2023 மனு கடந்த 26.9.2023- ம் தேதி அனுமதிக்கப்பட்டதன் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் சொன்ன தேதி நேரத்தில் புகாரை பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன தேதி நேரத்தில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கை சரியாக விசாரிக்காமல் பொய்யாக எதிரி மீது முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

நான் சொன்ன தேதி நேரத்தில் எதிரிகளிடமிருந்து எந்த வழக்கு சொத்தையும் கைப்பற்றவில்லை என்றாலும், எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**எதிரிக்கு எதிராக பிடிக்கட்டளை நிலுவையில் உள்ளது. குவிமுச பிரிவு 299 ன் கீழ் சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.**